

அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுப் பார்த்தல் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கி, சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.8.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உபத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மதுமதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், உறுப்பினர் செயலர் / தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, நிதித்துறை துணைச் செயலாளர் ம.பிரதிவிராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் ஷ்ரவன் குமார் ஜடாவத், நகராட்சி குடிநீர் வழங்கல் துறை துறை இணைச் செயலாளர் க.கற்பகம், பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் அண்ணாதுரை மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.154.59 கோடி மதிப்பில் நல உதவிகள் வழங்கல்!

# சேலத்தில் அரசு பொருட்காட்சிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தனர்!

சேலம், ஆக. 15-

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் (09.08.2024) அன்று சேலம், பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள போஸ் மைதானத்தில் சேலம் அரசுப் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து, 7,544 பயனாளிகளுக்கு ரூ.154.59 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான மூன்றாண்டு சாதனைகளை பறைசாற்றும் மற்றும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையிலான அரசுப் பொருட்காட்சியினை இன்றைய தினம் தொடங்கி வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சேலம் அரசுப் பொருட்காட்சியில் 32 அரசுத் துறைகளின் கண்காட்சி அரங்குகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களும் பொதுமக்களை அதிகம் கவரும் வகையில் அமைக்கப்பட்டு, தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்து அரசின் மக்கள் நலத் திட்டங்களை எவ்வாறு வெற்றிகரமாக செயல்படுத்துகிறோம் என்பதை அறிந்துகொண்டு தங்கள் மாநிலங்களில் அவற்றை செயல்படுத்தக் கூடிய வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்ற நாள் முதல், பல்வேறு மக்கள் நல திட்டப் பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, ஆரோக்கியமான வருங்கால சந்ததியினரை உருவாக்கும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் நான் முதல்வன் திட்டம், மகளிர் விடியல் பயணம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முத்தாய்ப்பாக அமைந்துள்ளன.

சேலம் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் 5.50 இலட்சம் மகளிருக்கு மாதம் ரூ.1,000/ வீதமும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் 1,440 பள்ளிகளில் பயிலும் 84,151 மாணாக்கர்களுக்கும், மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் மூலம் 18.91 கோடி பயணமும், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1,000/ வீதம் 23,927 மாணவிகளும் பயனடைந்துள்ளனர்.

தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000/ வீதம் 13,685 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 82,837 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சிகளும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 10.44 இலட்சம் நபர்கள் சிகிச்சைகளும், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் மூலம் 12,305 நபர்கள் சிகிச்சைகளும், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ், 1,673 பயனாளிகளுக்கு ரூ.7.82 கோடி மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ரூ.20 கோடி மதிப்பீட்டில் கருப்பூர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் பல்நோக்கு விளையாட்டு அரங்கிற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், 7,436 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நமக்கு நாமேத் திட்டத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் ரூ. 52.71 கோடி மதிப்பில் 339 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சேலம், பழைய பேருந்து நிலையம் ரூ.96.53 கோடி மதிப்பிலும், பள்ளப்பட்டி ஏரி ரூ.28.59 கோடி மதிப்பிலும் புனரமைக்கப் பட்டுள்ளது. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் மூலம் ரூ.35.85 கோடி மதிப்பீட்டில் 70,157 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 3,667 பயனாளிகளுக்கு ரூ.128.35 கோடி மதிப்பீட்டில் வீடுகளும்,

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 1,19,775 பயனாளிகளுக்கு ரூ.227.34 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இலவச சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் ஏற்காடு அடிவாரம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் செவி மாற்றுத் திறன் மாணவ, மாணவிகளுக்கான அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்களும், ஆவின் மூலம் 9,09,64,282 லிட்டர் நிலைப்படுத்திய பால் ரூ.383.97 கோடி மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள 31 பேரூராட்சிகளில் ரூ.330.64 கோடி மதிப்பிலான 763 பணிகளும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.1,321.45 கோடி மதிப்பிலான 90,520 பணிகளும், ரூ.652.84 கோடி மதிப்பீட்டில் இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர் ஆகிய பேரூராட்சிகள், இடங்கணசாலை நகராட்சி மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, சேலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 778 ஊரக குடியிருப்புகளில் 5.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டமும்,

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 152 இளைஞர்களுக்கு தொழில் தொடங்க ரூ.11.45 கோடி மானியமும் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று கடந்த மூன்று ஆண்டுகளில் மற்றும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை சேலம் மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். மேலும், சேலம் மாவட்டத்திற்கு என்னென்ன தேவை என்பதை கேட்டறிந்து தொடர்ந்து பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள், வளர்ச்சி பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவுள்ளார்கள்.

இன்றைய தினம் நடைபெறும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக வருவாய்த்துறை, கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.154.59 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நலத்திட்டங்களை பெறும் பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் வளர்ச்சி பெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் பேசினார்.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!

இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசியதாவது:

சேலம் அரசுப் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்திட உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் அரசுப் பொருட்காட்சியினை இன்றைய தினம் தொடங்கி வைத்துள்ள நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்ற நாள் முதல், பல்வேறு மக்கள் நல திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், மகளிர் விடியல் பயணம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முத்தாய்பாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகளை, அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில், அரசின் திட்டங்களும், சாதனைகளும் மிகச்சிறந்த முறையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம, நகர்ப்புர மக்கள், அரசுத்துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுது போக்கு அம்சங்களையும் கண்டுகளித்து, புத்துணர்வு பெறுவதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன. அரசுப் பொருட்காட்சிகளில் மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுது போக்காக அமைவதோடு நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது ஆகும். மேலும், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்தவும் இப்பொருட்காட்சிகளில் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகள் குறித்தும், அவற்றை பொது மக்கள் எளிதாக அறிந்து பயன்பெறும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பொருட்காட்சிகள் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

1978 முதல் 2024ஆம் ஆண்டு வரை தற்போது 220 பொருட்காட்சிகள் நடைபெற்று உள்ளது. சேலம் அரசுப் பொருட்காட்சி 221 வது பொருட்காட்சியாகும். சேலத்தில் தான் அரசுப் பொருட்காட்சி முதன் முதலில் 06.08.1978இல் தொடங்கப்பட்டு, இது வரை சேலத்தில் 39 அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்று உள்ளது.

தற்போது நடைபெற இருப்பது 40வது அரசுப் பொருட்காட்சியாகும். இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள சேலம் அரசுப் பொருட்காட்சிவரும் செப்டம்பர் 24 ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. அரசு பொருட்காட்சியின் மூலமாக பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து மென் மேலும் பயன்பெற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் பேசினார்.

இப்பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, வருவாய்த் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, கூட்டுறவுத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, பள்ளிக் கல்வித் துறை உள்ளிட்ட 26 அரசுத்துறை அரங்குகளும், சேலம் மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆவின் உள்ளிட்ட 6 அரசு சார்பு நிறுவனங்களின் அரங்குகள் என 32 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. ஆக்ரிதி சேத்தி,

மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் (நினைவகங்கள்) கு.தமிழ் செல்வ ராஜன், மண்டலக்குழுத்தலைவர்கள் கே.டி.ஆர். தனசேகர், திருமதி உமா ராணி, ம.அசோகன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## “வேர்களைத் தேடி” திட்டத்தில் புலம்பெயர் தமிழர்களின் வாரிசுகள்

# 200 பேர்தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முதலமைச்சர் அனுமதி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்!

செஞ்சி, ஆக. 15-

உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளை புதுப்பிக்கும் “வேர்களைத் தேடி” திட்டத்தின் மூலம் அயலகத்தில் வாழும் தமிழர்களின் நலன் காக்கவும் , அயலகத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து கல்வி , வேலை வாய்ப்புகள் என்று இடம் பெயரும் தமிழர்களை பாதுகாப்பாக வழிநடத்தவும் , தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலுடன் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை செயல்பட்டு வருகிறது .

அயலகத் தமிழர்களின் கலச்சார உறவுகளை மேம்படுத்துவதின் ஒரு பகுதியாக, பல தலைமுறைகளுக்கு முன்பு அயலகம் இடம் பெயர்த்து அங்கு வாழும் அயலகத்தமிழர்களின் குழந்தைகளுக்காக “வேர்களைத் தேடி” என்றொரு பண்பாட்டு திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். இத்திட்டம் மூலம் அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட தமிழர்களின் குழந்தைகள், இளைஞர்கள் தமிழ்நாடு அரசு செலவில் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து , அவர்கள் தமிழ் மற்றும் தமிழர்தம் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு ஒரு பண்பாட்டு பயணம் மேற்கொள்ளமுதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

### தமிழ்நாடு அரசு செலவு!

அதனடிப்படையில் “வேர்களைத் தேடி” திட்டத்தின் இரண்டாம் பண்பாட்டு பயணத்தை தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலத்துறை சார்பில் ஆகஸ்ட் 1ஆம் தேதி சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அயலக நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற

இப்பண்பாட்டு பயணத்திற்காக ஆஸ்திரேலியா , கனடா , இலங்கை,இந்தோனேசியா, பங்களாதேஷ், பர்மா, உகாண்டா பிரான்ஸ்,ஜெர்மனி உள்ளிட்ட 15 நாடுகளில் இருந்து 100 ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் தேர்வாகி தமிழ்நாடு அரசு செலவில் வந்துள்ளனர் .

### தமிழர்களின் கலாச்சாரம்!

இவர்கள் சென்னையில் இருந்து மகாபலிபுரம் , தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, திருச்சி, செஞ்சிகோட்டை ஆகிய இடங்களுக்கு பயணித்து தமிழர்களின் கட்டிடகலை, சிற்பக்கலை, இயல் , இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம், சுதந்திரபோராட்ட வரலாறு உள்ளிட்ட பல்வேறு தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றை அறிந்து கொள்வார்கள் . இந்த இரு வார பயணத்தின் மூலம் தமிழர்களின் கலாச்சாரம் , வரலாறு , மொழியியல் உட்பட பல்வேறு திறன்களை பெறுவார்கள் .

இதையடுத்து இக்குழுவினர் நேற்றுவிழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி அரசு மேல்நிலைப்பள்ளிக்குவருகை தந்தனர் இவர்களை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி வரவேற்றார். தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழா முன்னிட்டு 100 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.இதைத் தொடர்ந்து இக்குழுவினர்செஞ்சிக்கோட்டைக்கு வருகை தந்தனர்.

செஞ்சிகோட்டையில் உள்ளகல்யாண மஹால் நெற்களஞ்சியம், போர் வீரர்களின் குடியிருப்பு பகுதிகள், மற்றும் புரதான வரலாற்று நினைவு சின்னங்கள் பார்வையிட்டனர். மேலும் கோட்டையில் உள்ள தொன்மையான நினைவிடங்கள் பற்றி அவர்கள் மனதில் பதியும் வகையில் விளக்கிக் கூறப்பட்டது. இதை அவர்கள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

### சமத்துவப் பொங்கல் விழா!

இதைத் தொடர்ந்துஅயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை சார்பில்சமத்துவ பொங்கல் விழா செஞ்சி அடுத்த ஆலம்பூண்டியில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது.

வேர்களைத் தேடித் திட்டத்தின் மூலம் புலம்பெயர் தமிழர்களின் வாரிசுகள் தமிழர்களின் சிறப்பு வாய்ந்த சமத்துவ பொங்கல் விழா, உறியடி விழா, கயிறு இழுத்தல், கபடி உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த இக்குழுவினரைசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஆரணி எம்.பி.தரணிவேந்தன் ஆகியோர் மேளதாளம் முழங்க சிறப்பான வரவேற்பளித்தனர்.

தொடர்ந்து சமத்துவ பொங்கல் விழாவில் நடைபெற்ற தப்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், பரதநாட்டியம், சிலம்பாட்டம்,உள்ளிட்ட தமிழர்களின்கலாச்சாரம்,பண்பாடு உள்ளிட்ட பெருமைகளை பறைசாற்றும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும் இக்குழுவில் பங்கேற்றவர்கள்கும்பியாட்டம், நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தங்களது திறன்களை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்துசமத்துவ பொங்கல் விழா, உரியடி திருவிழா நடைபெற்றது இந்நிகழ்ச்சியில்வேர்களைத் தேடித் திட்டத்தின் மூலம் புலம்பெயர் தமிழர்களின் வாரிசுகள் அனைவரும் பங்கேற்றுபொங்கல் வைத்து படையலிட்டு பொங்கலோ பொங்கல் என வழிபட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற உறியடி விழா நிகழ்ச்சியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்று உற்சாகமாக உரியடித்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இக்குழுவினர் வேர்களை தேடி திட்டத்தின் மூலம் தமிழகத்தின் கலாச்சாரம் பண்பாடுகளை தெரிந்து கொள்வதற்கு எங்களுக்கு ஒரு சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளை புதுப்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேர்களைத் தேடி திட்டத்தை அறிவித்து அதன் மூலம் அயலகத்தில் வாழும் தமிழர்களை நலன் காக்கவும்,அவர்களைப் பாதுகாப்பாக வழி நடத்தவும்அயலக தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் வகையில் அயலக தமிழர் தினம் என்னும் சிறப்பு தினத்தை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

### தமிழர்களின் பெருமைகளை அறியும் நிகழ்ச்சி!

அந்த வகையில் பல தலைமுறைகளுக்கு முன்பு அயலகம் இடம்பெயர்ந்து அங்கு வாழும் அதலகத் தமிழர்களின் குழந்தைகளுக்காக வேர்களைத் தேடி என்றொரு பண்பாட்டு திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் வாழும் தமிழர்களின் குழந்தைகள் இளைஞர்கள் 200 பேரை தமிழ்நாடு அரசு செலவில் தமிழ்நாட்டுக்கு வரவழைத்து அவர்கள் கலை பண்பாடு கலாச்சாரம் தெரிந்து கொள்ளும் வகையிலும், மற்றும் தமிழர்த்தம் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு ஒரு பண்பாட்டு பயணத்தை மேற்கொள்ள வழிவகை செய்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் முதலாண்டில் 52 நபர்களும், தற்பொழுது 100 பெரும் வந்துள்ளனர்.

இப்பணத்தில் மேலும் 200 பேர் வருவதற்கு முதலமைச்சர் அனுமதி அளித்துள்ளார். படிப்படியாக உலகெங்கும் வாழும் தமிழர்களின் பிள்ளைகள் தமிழகத்திற்கு வந்து தமிழ் மொழிகள் பண்பாடு கலாச்சாரம் பெருமைகளை அறிந்து கொண்டு செல்லும் வகையில் இந்தச் சுற்றுலா அமையும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி,திண்டிவனம் சப் கலெக்டர் திய்யான் ஷு நிகம்,மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சேது நாதன்,ஒன்றிய குழு தலைவர்கள் விஜயகுமார், கண்மணி நெடுஞ்செழியன், அமுதா ரவிக்குமார், சொக்கலிங்கம், தயாளன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் செஞ்சி மொக்தியார் அலி மஸ்தான், துணைசேர்மன்கள் ஜெயபாலன், பழனி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன்,விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், செழியன், வட்டாட்சியர் ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், தி.மு.க. நிர்வாகிகள் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.